# இணைப்புகள்

## 1. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகார ஒப்படைப்பு குறித்த மாநில திட்டக் குழுவின் கருத்தினை கேட்டு பெறப்பட்ட அரசு கடிதம்

எஸ். நாரயண், இ.ஆ.ப
அரசு செயலர்
ஊரக வளர்ச்சித் துறை

தலைமைச் செயலகம்
சென்னை - 9.

நே.மு. கடித எண். 2099 / சி. ஐ. / 96 - 8, நாள் 20-9-1996

அன்பார்ந்த பண்டா,

பொருள் :- உள்ளாட்சி அமைப்புகள் - அதிகார ஒப்படைப்புகள் தொடர்பாக

மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் அக்டோபர் மாதத்தில் நடைபெற உள்ளது. மேலும் இப்புதிய அமைப்புகள் அக்டோபர் மூன்றாவது வாரத்தில் பொறுப்பேற்க உள்ளன.

மூவகைப்பட்ட அமைப்புகளான, மாவட்ட ஊராட்சிகள், வட்டார அளவிலான ஊராட்சிகள் மற்றும் ஊராட்சிகளுக்கு உரிய அதிகாரங்களை வழங்குவதற்கான பணிகளை இத்துறை ஏற்கனவே மேற்கொண்டு அதற்குரிய அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளது. 1994 - ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 257-ல் அரசால் அதிகாரம் ஒப்படை செய்வதற்கான ஏற்பாடு அல்லது இச்சட்டத்தின் அட்டவனை 4-ல் பட்டியிடலப்பட்டுள்ள பொருள்கள் குறித்த அதிகாரங்களை வழங்க வகைப்படுத்தப்பட்டுள்ளது. அட்டவணை 4-ல் 29 இனங்கள் அதாவது வேளாண்மை, குடும்ப நலம், பொது விநியோக முறை போன்றவை வரிசையாக பட்டியிலிடப்பட்டுள்ளது.

ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகார ஒப்படைப்பு செய்வது மீதான கருத்துக்கள் மீது அரசு நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக மாநிலத் திட்டக் குழு உறுப்பினர்களைக் கொண்ட ஓர் பணிக் குழு ஒன்றை அமைத்து கீழ்கண்ட பொருள் பற்றி பரிசீலனை செய்து அதன் கருத்துக்களை பரிந்துரைச் செய்தால் அது எனக்கு நன்றியுள்ளதாய் இருக்கும்.

1) ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் ஒப்படைப்பு செய்தல் மற்றும்

2) ஊராட்சிகளின் பங்கு, கடமைகள் மற்றும் பணிகள் குறித்து அவைகளுக்கு ஏற்ற அதிகார ஒப்படைப்பு செய்தல்

குழு மேற்கண்டவற்றை கருத்தில் கொண்டு அதன் பரிந்துரைகளை ஒரு மாத காலத்திற்குள் கொடுத்தால் அது பாராட்டுக்குரியதாக இருப்பதுடன் அதன் மீது அரசாணைகள் வழங்கவும் ஏதுவாக இருககும்.

தங்களன்புள்ள

(ஒப்பம்)

**(எஸ். நாரயணன்)**

பெறுநர்

**திரு. ஆர். சி. பண்டா இ.ஆ.ப**
உறுப்பினர் செயலாளர், மாநிலத் திட்டக் குழு
சேப்பாக்கம், சென்னை - 600 005.